[1993 ஏப்ரல் 6

245—

அஞ்செட்டி, நாட்ராபாளையம் ஆகிய பகுதிகளில் மின் அழுத்தக் குறைபாடு.

*10030 —திரு. மு. வெங்கடராம ரெட்டி : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

அஞ்செட்டி, நாட்ராபாளையம், சூலுகுண்டா, தொட்ட மஞ்சி பகுதிகளில் மின்சாரம் குறைந்த அழுத்தத்தோடு உள்ளதால் இதனை சரி செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

அஞ்செட்டி, நாட்ராபாளையம், சூலுகுண்டா, தொட்ட மஞ்சி ஆகிய பகுதிகளில் மின்சார விநியோகத்தை ஆய்வு செய்ததில், தற்போது இப்பகுதிகளில் குறைபாடுகள் ஏதுமின்றி மின்னழுத்தம் சீராக உள்ளது எனத் தெரிய வருகிறது.

திரு. மு. வெங்கடராம ரெட்டி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அஞ்செட்டி, நாட்ராபாளையம், சூலுகுண்டா, தொட்டமஞ்சி போன்ற பகுதிகளிலும், மற்ற இடங்களிலேயும் ஏறக்குறைய 60, 70 சதவீதம்— என்னுடைய தொகுதியிலே—மின்சாரம் லோயஸ்ட் வோல்டேஜாக இருக்கிறது. இதனால், மாணவ மாணவிகள் படிக்கக் கஷ்டப்படுகிறார்கள் அவர்கள் சிமை எண்ணெயைத்தான் உபயோகப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள் இதைப் பற்றி, தர்மபுரி மாவட்ட டி டி சி. கூட்டத்திலேயும் நான் பேசியிருக்கிறேன். அதைச் சரிப்படுத்த வேண்டும் என்று, டி.என்.இ.பி. அதிகாரிகள் சொன்னார்கள். ஆனாலும் இதுவரையிலும் சரிப்படுத்தப்படவில்லை. நாங்கள் யூனியனிலேயிருந்து 1 லட்சம் ரூபாய் வரையில், ஒரு வருடத்திற்கு டியூப் லைட்ஸ் வாங்குகிறோம். அந்த டியூப் லைட்டுகள் எல்லாம் இன்றைக்கு எரியவில்லை. நாங்கள் கேட்டால், அதை மாற்றினோம், அது எரியாமல் இருப்பதற்குக் காரணம் வோல்டேஜ் குறைவாக இருப்பதுதான் என்று சொல்கிறார்கள்.

இரண்டாவதாக, நிறைய இடத்திலே வோல்டேஜ் பிளக்சுவேசன், மற்றும் லோயஸ்ட் வோல்டேஜ் இருப்பதால், ஓவர்-ஹெட் டாங்கிலே பயன்படுத்தப்படுகிற மோட்டார்கள் எல்லாம் அடிக்கடி ரிப்பேராகிக் கொண்டு இருக்கின்றன. உதாரணத்திற்குச் சொல்லவேண்டும் என்றால், ஜெக்கேரி

1993 ஏப்ரல் 6]

யிலே போன வருடம் ஒரு மாதத்திலே 24 ஆயிரம் ரூபாய் செலவாகியிருக்கிறது அந்த மோட்டாருக்கு. அதன் விலையே 10 ஆயிரம் ரூபாய். இந்த மாதிரி லோயஸ்ட் வோல்டேஜ் இருப்பதாலே, அரசாங்கத்திற்கு ரொம்ப நஷ்டம் ஏற்படுகிறது. இதனால் ஜனங்களுக்கும் பிரச்சினை ஏற்படுகிறது. எனவே, இதற்கு அமைச்சர் அவர்கள் உடனடியாக நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கருத்தை இந்த அரசு பரிசீலிக்கிறது. அஞ்சட்டி மற்றும் தொட்ட மஞ்சி பகுதிகளிலே ஏற்கெனவே தென்கனிகோட்டை 33/11 என்ற மின் நிலையத்திலிருந்து மின் சக்தி, 3 டிஸ்டிரிபியூசன் டிரான்ஸ்பார்மர்கள் என்று சொல்லப்படுகிற 3 மின்பகிர் மாற்றிகள் மூலம் அனுப்பப்பட்டு வந்தது. இந்தப் புகார்கள் வந்ததற்குப் பின்னாலே, இப்போது—அந்தத் துணை மின் நிலையம் வெளிச்சந்தை மின் நிலையத்தோடு இணைக்கப்பட்டு இருந்தபோது இந்தப் பிரச்சினை வந்தது. ஹோசூர் 110/33 கே.வி. துணை மின் நிலையத்தோடு இணைக்கப்பட்டு இருக்கிறது. ஆகவே ஏற்கனவே இருந்த நிலை மாறி, தற்போது மின் விநியோகம் மின் அழுத்தம் எல்லாம் சரியாக இருப்பதாக அதிகாரிகள் தெரிவித்து இருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்தப் பிரச்சினை தொடர்ந்து கொண்டிருக்கிறது அந்தப் பகுதியிலே பல்வேறு பிரச்சினைகள் மோட்டார்களை இயக்கச் செய்வது, வீடுகளிலே விளக்கு எரியாமல் போகிற பிரச்சினைகள் எல்லாம் இருக்கிறது என்று இந்த அவையிலே தெரிவித்திருக்கிறார்கள். அதுபோன்ற பிரச்சினைகள், முன்னுக்குப் பின் முரணான தகவல்கள் இருக்கிற சூழ்நிலை இருக்குமானால், உடனடியாக அந்தப் பகுதியிலே இருக்கிற மின் வாரிய உயர் அதிகாரிகளை அந்தப் பகுதிக்கு அனுப்பி இன்னும் ஒரு வார காலத்திற்குள் அங்கே இருக்கிற நிலைமையைக் கண்டறிந்து மின் வினியோகத்தைச் சீரமைப்பதற்கு உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இது தவிர, ஏற்கெனவே சூலகுண்டா கிராமத்தில் நம்முடைய அரசு பொறுப்பேற்றதற்குப் பின்னாலே, 22-7-92 அன்று 15 கே.வி.ஏ. மின் பகிர்மாற்றி ஒன்றை நிறுவி இருக்கிறோம். இந்தப் பிரச்சினை குறித்து பொதுவாக இந்த அவைக்கு ஒரு கருத்தை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புவது என்னுடைய கடமை என்று கருதுகிறேன். இந்த குறைந்த மின் அழுத்தம், லோ வோல்டேஜ் என்று சொல்லப்படுகிற பிரச்சினை நெடுநாட்களாக இருக்கிற பிரச்சினை. இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு இன்றைக்கு பல்வேறு நடவடிக்கைகளை நாம் எடுத்திருக்கிறோம். புதிய டிரான்ஸ்

[1993 ஏப்ரல் 6

பார்பர்களைப் போடுகிறோம். புதிய மின் துணை நிலையங்களை அமைக்கிறோம். ஆகவே காலப்போக்கில் சரி செய்யப்படவேண்டிய பிரச்சினை இது. ஆகவே இந்த அரசு பொறுப்பேற்றதற்குப் பின்னாலே புதிய மின் நிலையங்கள் நிறுவியிருப்பது எத்தனை என்பதை வருகின்ற மின்சார வாரியத்தினுடைய கோரிக்கையிலே நாங்கள் சொல்ல இருக்கிறோம். ஆகவே இந்தப் பிரச்சினை தமிழகம் முழுவதும் பல்வேறு இடங்களிலே இருக்கிறது. குறிப்பாக மலைப் பகுதியிலே இந்தப் பிரச்சினை அதிகமாக இருக்கிறது என்பதை இந்த அரசு நன்றாக அறியும். இது ஒரு நெடுநாளையத் திட்டம். ஆகவே தொலைநோக்குத் திட்டத்தோடு இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு நாம் பல நடவடிக்கைகளை மேற்கொண்டு இருக்கிறோம். இதைப் பற்றி நான் பின்னர் விவரமாகத் தெரிவிக்கிறேன் ஆகவே நம்முடைய உறுப்பினர் தெரிவித்ததைப் போன்று அந்தப் பிரச்சினை அங்கே இருக்குமா என்பதை இன்னும் ஒரு வார காலத்திற்குள் உயர் அதிகாரிகளை அந்தப் பகுதிக்கு அனுப்பி அப்படி இருக்குமானால், அதற்குரிய பரிகாரத்தை இந்த அரசு உடனடியாக மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்:</u> டாக்டர் வெ. புருஷோத்தமன்

<u>டாக்டர் வெ. புருஷோத்தமன்:</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் துணை மின் நிலையங்கள் ஏற்படுத்தவேண்டும், டிரான்ஸ்பார்மர்கள் மாற்றப்பட வேண்டும் என்று சொன்னார்கள்—அவருடைய தொகுதிக்குப் பக்கத்து தொகுதியாக என்னுடைய தொகுதியும் இருப்பதாலே, என்னுடைய தொகுதியிலும் அதிகமாக லோ-வோல்டேஜ் இருக்கிறது. இதற்குக் காரணம் லைன் லாஸ் இந்த லைன் லாஸ் சரிக்கட்டப்படவேண்டும் என்று பல முறை அதிகாரிகளுக்குச் சொல்லியபோது ஆயில் சர்குயூட் பிரேக்கர் வரவேண்டும் என்றும், டிரான்ஸ்பார்மரை மாற்றவேண்டும் என்றும், துணை மின் நிலையத்தினுடைய சக்தியை அதிகரிக்கவேண்டும் என்றும், தற்போது 11 கே.வி. ஏ-யாக இருப்பதை 33 கே.வி.ஏ-யாக மாற்றவேண்டும் என்றும் அதிகாரிகள் தெரிவித்துள்ளார்கள் இந்தக் குறைபாடுகளை நிவர்த்தி செய்தால், உடனடியாக அந்தப் பிரச்சினை நீங்கும். இதற்கு ஏதேனும் திட்டம் உள்ளதா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

1993 ஏப்ரல் 6]

முற்பகல் 10-30

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் லைன் லாஸ் என்று தெரிவித்தார்கள். அதைச் சொல்வது என்னுடைய கடமை என்று கருதுகிறேன். இந்தியாவிலே லைன் லாஸ் குறைவாக உள்ள மாநிலம் நம்முடைய தமிழ்நாடு தான். 18.5 சதவீதம் என்ற அளவிற்கு இருக்கிறது. இந்தியாவினுடைய லைன்-லாஸ் 23 சதவீதத்திற்கு மேலே இருக்கிறது. நம்முடைய மாநிலத்தில்தான் மிகக் குறைவான லைன்-லாஸ். அதைத் தவிர்க்க முடியாது. அதைக் குறைப்ப தற்கான நடவடிக்கைகளை நாம் மேற்கொண்டிருக்கிறோம். ஆகவே புதிய துணை மின்நிலையங்கள் அமைப்பதும், புதிய டிரான்ஸ்பார்மர்கள் அமைப்பதும் அந்தப் பகுதியிலே மின் அழுத்தத்தை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகள். அதை நான் ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன். இந்தக் கேள்விக்கு பதிலளித்தபோதுகூட சொல்லி இருக்கிறேன். இதுபோன்ற. பிரச்சினைகள் காலங்காலமாக இருக்கின்ற பிரச்சினைகள்தான், இதிலே நடவடிக்கை எடுக்கவேண்டுமென்ற வகையில், தமிழ்நாடு முழுவதும் ஒட்டுமொத்தமாக அத்துணை துணை மின் நிலையங்களிலும் இதை அமைத்து புதியதாக டிரான்ஸ் பார்மர்கள் அமைக்க வேண்டுமென்றால், எத்தனை கோடி ரூபாய் செலவாகும் என்பதை நீங்கள் அறிவீர்கள். இருக்கின்ற பட்ஜெட்டை வைத்துக்கொண்டு பல வெளி நிறுவனங்க ளிடத்திலே நிதியாதாரங்களைப் பெற்று, பல்வேறு நடவடிக்கை களை 1 1/2 ஆண்டுக்காலமாக நாங்கள் மேற்கொண்டிருக்கிற காரணத்தினாலேதான் இன்றைக்கு இந்தியாவிலேயே விநியோ கம் சீராக இருக்கின்ற ஒரு மாநிலம் எதுவென்று சொன்னால், அது தமிழ்நாடுதான் என்பதை அனைவரும் ஒத்துக்கொண் டிருக்கிறார்கள். ஆகவே லைன்-லாஸ் என்பது தமிழ்நாட்டிலே 5 சதவீதம் குறைவு, இந்திய அளவோடு ஒப்பிடுகின்றபோது. இதிலே பிரச்சினை இல்லை. புதிய துணை மின் நிலையங் களிலேயும் டிரான்ஸ்பார்மர்கள் அமைக்க வேண்டுமென்ற கோரிக்கையை இந்த அரசு ஏற்கும். அந்தந்தப் பகுதியிலே புகார்கள் வருகின்றபோது அதைப் பற்றி கவனமாக பரிசீலித்து நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருமதி ஏ. எஸ் பொன்னம்மாள்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு திரு. வெங்கடராம ரெட்டி தொகுதியிலே மட்டும் இந்த மின் அழுத்தக் குறைவு இல்லை.

மாநிலம் முழுவதிலேயும் இந்த மின் அழுத்தம் குறைகின்ற காரணத்தினால் மோட்டார் போட்டு, ஸ்விட்சு ஆன் பண்ணிய வுடனே, கால் மணி நேரம் ஓடுகிறது. பிறகு அப்படியே பர்ன் ஆகிவிடுகிறது. பர்ன் ஆகிவிடுகின்ற காரணத்தினாலே, ஒரு மின் மோட்டாருக்கு காயில் கட்டவேண்டுமென்றால், அதற்கு அந்த மோட்டார் எந்த அளவிற்கு வாங்கினோமோ அப்படி வாங்கின அளவிற்கு செலவாகிவிடுகின்ற சூழ்நிலை ஏற்படுகின்ற காரணத்தினாலே, எங்கெங்கே இந்தத் துணை மின் நிலையம் ஆரம்பிக்கவேண்டுமென்று நாம் ஏற்கெனவே அந்தச் செயற்குறிப்பிலே குறிப்பிட்டிருக்கிறோமோ, அந்தப் பகுதியிலே—குறிப்பாக நாங்கள் கூட, சித்திரநத்தத்திலே ஒரு துணை மின் நிலையம் அமைக்கவேண்டுமென்று சொல்லியிருக் கிறோம். அது இன்னும் ஆரம்பிக்கப்படவில்லை—அப்பேர்ப் பட்ட பகுதிகளுக்காவது இந்த துணை மின் நிலையத்தை விரைவிலே அமைத்து, இந்த மின் அழுத்தக் குறைவை நிவர்த்தி செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே தெரிவித்த தைப் போல பல்வேறு கோரிக்கைகள் இந்த அரசுக்கு வந்திருக் கின்றன. இது எல்லாத் தொகுதிகளிலேயும் இருக்கின்ற பிரச்சினைகள். துணை மின் நிலையங்கள், புதிய டிரான்ஸ் பார்மர்கள் அமைப்பது போன்ற பிரச்சினைகள் எல்லாம் அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களும் தந்திருக்கிறார்கள். ஆகவே எந்தப் பகுதியிலே முன்னுரிமை கொடுக்க வேண்டு மென்று அதிகாரிகளை அழைத்து, எங்கே மிக மோசமான நிலைமை இருக்கிறதோ, அங்கேதான் முன்னுரிமை கொடுத்து அமைத்திருக்கிறோம். அதுபோல் எந்தெந்த இடங்களிலே துணை மின் நிலையங்களை அமைக்கவேண்டுமென்று அறிவித் திருக்கிறோம். இந்த ஆண்டும் அறிவித்திருக்கிறோம். அந்தப் பணிகள் எல்லாம் நடைபெற்று வருகிறது. அதற்கு ஒரு தொலைநோக்குத் திட்டம் வேண்டுமென்று சொல்லியிருக் கிறார்கள். அதற்கான ஒரு திட்டத்தையும் தயாரித்திருக் கிறோம். அந்த மாதிரி பிரச்சினை இருக்கக் கூடாது என்பதற்காக பல கோடி ரூபாய் தேவைப்படுகிறது. அந்த நிதியைப் பெறுவதற்கும் சில வழிமுறைகளை இன்றைக்கு ஆராய்ந்து வருகிறோம். இந்த பிரச்சினைகள் வருகின்ற போது, சட்டமன்ற உறுப்பினர்களிடத்திலே தெரிவித்தால் உடனடியாக அந்தப் பகுதியிலே புதிய டிரான்ஸ்பார்மர்கள் அமைப்பது போன்ற பணிகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். முடிந்த அளவில் இந்த அரசு அந்தப் பிரச்சினைகளைக் கனிவோடு பரிசீலித்து விவசாயி களுக்கு ஏற்படுகின்ற பிரச்சினைகளுக்கும், மின்

1993 ஏப்ரல் 6]

மோட்டார் வைத்திருக்கின்றவர்களுடைய பிரச்சினைகளுக்கும் தீர்வு காண்பதற்கான அந்த வழி முறைகளை ஆராயும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 246, திரு. மா. சுந்தரதாஸ், இருக்கையில் இல்லை. திரு. இரா. அப்பு நடேசன், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர்.

246—

பேச்சிப் பாறை அணையில் தூர் எடுத்தல்.

*10047—திரு. இரா. அப்பு நடேசன் :
திரு. மா. சுந்தரதாஸ் :

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டம், திருவட்டார் தொகுதி, பேச்சிப்பாறை அணை தூர் எடுக்கப்படாமல் அதன் கொள்ளளவு குறைந்து வருவதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், தூர் எடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) பேச்சிப்பாறை அணையின் கொள்ளளவு மதகு மட்டத்திற்கு மேல் 4,350 மில்லியன் கனஅடி ஆகும். மதகு மட்டத்தின் கீழ் 936 மில்லியன் கன அடி i.e. Dead storage ஆக இருக்கின்றது. கடல் அணுமின் திட்டத்தின் வண்டற்படிவு ஆய்வு கமிட்டி, ஆய்வு செய்ததில் வண்டற்படிவினால் பேச்சிப்பாறை அணையின் கொள்ளளவில் எவ்வித பாதிப்பும் இல்லை என்று தெரிவித்திருக்கிறார்கள். எனவே பேச்சிப் பாறை அணையை தூர் எடுக்க வேண்டிய அவசியம் தற்போது இல்லை.

திரு. இரா. அப்பு நடேசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் பேச்சிப் பாறை அணையிலே கொள்ளளவு குறையவில்லை என்று கூறியிருக்கிறார்கள். பேச்சிப்பாறை அணையைத்தான் கன்னியாகுமரி மாவட்டம் முழுவதும் விவசாயிகள் நம்பிக் கொண்டிருக்கிறார்கள். ஏறத்தாழ 100 ஆண்டுகள் ஆகின்றன அணையைக் கட்டி. கடந்த ஆண்டு நவம்பர் மாதம் பெய்த